# தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம்

செய்தி வெளியீடு

செய்தி வெளியீடு எண். 65/2022 நாள் 18.06.2022

## உள்ளாட்சி அமைப்புகளில் காலியாக உள்ள பதவியிடங்களை நிரப்புவதற்கான தற்செயல் தேர்தல்கள் அட்டவணை - தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம் வெளியிட்டது

-----

தமிழ்நாட்டில் உள்ள உள்ளாட்சி அமைப்புகளில் 30.04.2022 வரை ஏற்பட்டுள்ள காலியிடங்களுக்கு 09.07.2022 அன்று தற்செயல் தேர்தல்களை நடத்திட தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம் முடிவெடுத்துள்ளது. இதற்கான அறிவிக்கை 20.06.2022 அன்று வெளியிடப்படும். அன்றே வேட்பு மனு தாக்கல் துவங்கும். வாக்குப்பதிவு 09.07.2022 அன்று காலை 7.00 மணிக்கு தொடங்கி மாலை 6.00 மணியுடன் முடிவடையும். வாக்கு எண்ணுகை 12.07.2022 அன்று நடைபெறும்.

காலியிட விவரங்கள்

**I.** ஊரகம்

| வ.எண் | பதவியிடம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | மாவட்ட ஊராட்சி வார்டு உறுப்பினர் | 2 |
| 2. | ஊராட்சி ஒன்றிய வார்டு உறுப்பினர் | 20 |
| 3. | கிராம ஊராட்சித் தலைவர் | 40 |
| 4. | கிராம ஊராட்சி வார்டு உறுப்பினர் | 436 |
| | மொத்தம் (ஊரகம்) | 498 |

**II.** நகர்ப்புறம்

| வ.எண் | பதவியிடம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | மாநகராட்சி வார்டு உறுப்பினர் | 2 |
| 2 | நகராட்சி வார்டு உறுப்பினர் | 2 |
| 3 | பேரூராட்சி வார்டு உறுப்பினர் | 8 |
| | மொத்தம் (நகர்ப்புறம்) | 12 |
| | பெருமொத்தம் (ஊரகம் மற்றும் நகர்ப்புறம்) | 510 |

498 ஊரக உள்ளாட்சிப் பதவியிடங்களுக்கும், 12 நகர்ப்புற உள்ளாட்சிப் பதவியிடங்களுக்கும் என மொத்தம் 510 பதவியிடங்களுக்கு தேர்தல் நடைபெறும். இப்பதவியிடங்களில் 34 பதவியிடங்கள் கட்சி அடிப்படையில் தேர்தல்கள் நடைபெறும்.

கட்சி அடிப்படையில் நடைபெறும் தேர்தல்கள்

ஊரக உள்ளாட்சி அமைப்புகளில் மாவட்ட ஊராட்சி வார்டு உறுப்பினர், ஊராட்சி ஒன்றிய வார்டு உறுப்பினர் பதவியிடங்களுக்கும், நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் அனைத்து பதவியிடங்களுக்கும் கட்சி அடிப்படையில் தேர்தல்கள் நடைபெறும்.

கட்சி அடிப்படையில் அல்லாமல் நடைபெறும் தேர்தல்கள்

ஊரக உள்ளாட்சி அமைப்புகளில் கிராம ஊராட்சி வார்டு உறுப்பினர் மற்றும் கிராம ஊராட்சி தலைவர் பதவியிடங்கள் கட்சி அடிப்படையில் அல்லாமல் தேர்தல்கள் நடைபெறும்.

தேர்தல் அட்டவணை

| | | |
|---|---|---|
| 1. தேர்தல் அறிவிப்பு வெளியிடுதல் மற்றும் வேட்பு மனுக்கள் பெறுவதற்கான ஆரம்ப நாள் | 20.06.2022 | மு.ப. 10.00 முதல் பி.ப. 5.00 வரை |
| 2. வேட்பு மனுக்கள் பெறுவதற்கான கடைசி நாள் | 27.06.2022 | |
| 3. வேட்பு மனுக்கள் பரிசீலனை | 28.06.2022 | மு.ப. 10.00 மணி |
| 4. வேட்பு மனு திரும்பப் பெறுதல் | 30.06.2022 | பி.ப. 3.00 வரை |
| 5. வாக்குப்பதிவு நாள் | 09.07.2022 | காலை 7.00 முதல் மாலை 6.00 வரை |
| 6. வாக்கு எண்ணிக்கை துவங்கும் நாள் | 12.07.2022 | காலை 8.00 மணி |
| 7. தேர்தல் நடைமுறைகள் முடிவு பெறும் நாள் | 14.07.2022 | |

வேட்புமனுக்கள் தாக்கல் செய்தல், வேட்புமனுக்களை ஆய்வு செய்தல், வேட்புமனுக்களை திரும்பப் பெறுதல் மற்றும் சின்னங்கள் ஒதுக்கீடு செய்தல் ஆகிய நிகழ்வுகளை கண்காணிப்புக் கேமரா (CCTV) மூலம் பதிவு செய்திட ஆணையத்தால் மாவட்ட தேர்தல் அலுவலர்களுக்கு உரிய ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன.

<u>வாக்குச் சாவடிகள்</u>

மாவட்டத் தேர்தல் அலுவலர்களிடமிருந்து பெறப்பட்ட அறிக்கைகளின்படி, இத்தேர்தலில் ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு 1022 வாக்குச்சாவடிகளும், நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு 19 வாக்குச்சாவடிகளும் என மொத்தம் 1041 வாக்குச்சாவடிகள் பயன்படுத்தப்பட உள்ளன. வாக்குச்சாவடிகளில் வாக்குப்பதிவு நடவடிக்கைகளை கண்காணிப்பு கேமிரா (CCTV) / நுண் பார்வையாளர்கள் (Micro observer) / இணையதள கண்காணிப்பு (Web streaming) ஆகியவற்றின் மூலம் மாவட்ட அளவில் மாவட்ட அளவில் கண்காணிக்கப்பட உள்ளன.

<u>மாற்றுத் திறனாளிகளுக்கான வசதிகள்</u>

மாற்றுத் திறனாளிகள் எளிதாக வாக்களிப்பதற்கு ஏதுவாக வாக்குச்சாவடிகளில் சாய்வு தளம் (Ramp), சக்கர நாற்காலி (Wheel chair) மற்றும் துணையாள் (Helper) ஆகிய முன்னேற்பாடுகள் செய்திட மாவட்ட தேர்தல் அலுவலர்களுக்கு தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையத்தால் அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன,

<u>கோவிட்-19 பெருந்தொற்று தடுப்பு நடவடிக்கை</u>

வாக்குப்பதிவு நடைபெறும் இடங்களில் கோவிட்-19 தடுப்பு தொடர்பான அரசு வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்றுமாறு மாவட்டத் தேர்தல் அலுவலர்களுக்கு தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையத்தின் மூலம் அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

**தேர்தல் நடத்தும் அலுவலர்**

ஊரக உள்ளாட்சி தேர்தலுக்கென 279 தேர்தல் நடத்தும் அலுவலர்களும், நகர்ப்புற உள்ளாட்சி தேர்தலுக்கென 12 தேர்தல் நடத்தும் அலுவலர்களும் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

<u>வாக்குப்பதிவு</u>

நகர்ப்புற உள்ளாட்சி தேர்தல்களுக்கு மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களும் ஊரக உள்ளாட்சி தேர்தல்களுக்கு வாக்குச்சீட்டுகளும் வாக்குப்பதிவிற்கு பயன்படுத்தப்படும்.

**நடத்தை விதிகள்**

மாவட்ட ஊராட்சி வார்டு உறுப்பினர் தேர்தல் நேர்வில் தொடர்புடைய மாவட்ட ஊராட்சி வார்டு அடங்கிய ஊராட்சி ஒன்றிய பகுதிகள் முழுமைக்கும் நடத்தை விதிகள் பொருந்தும்.

ஊராட்சி ஒன்றிய வார்டு உறுப்பினர் தேர்தல் நேர்வில் தொடர்புடைய ஊராட்சி ஒன்றியம் முழுமைக்கும் நடத்தை விதிகள் பொருந்தும்.

கிராம ஊராட்சி தலைவர் மற்றும் கிராம ஊராட்சி வார்டு உறுப்பினர் தேர்தல் நேர்வில் தொடர்புடைய கிராம ஊராட்சி முழுமைக்கும் பொருந்தும்.

மாநகராட்சி வார்டு உறுப்பினர் தேர்தல் நேர்வில் தொடர்புடைய வார்டு அடங்கிய மண்டலம் முழுமைக்கும் பொருந்தும்.

நகராட்சி மற்றும் பேரூராட்சி வார்டு உறுப்பினர் தேர்தல் நேர்வில் தொடர்புடைய நகராட்சி மற்றும் பேரூராட்சி முழுமைக்கும் பொருந்தும்.

மேற்படி மாதிரி நடத்தை விதி தொகுப்பானது தேர்தல் அறிவிக்கப்படும் இன்றைய நாளிலிருந்து (18.06.2022) தேர்தல் நடைமுறைகள் முடிவு பெறும் நாளான 14.07.2022 வரை மேற்சொன்ன பகுதிகளில் அமலில் இருக்கும்.

**வேட்பாளர் தேர்தல் செலவுக் கணக்கு**

தொடர்புடைய உள்ளாட்சி அமைப்புகளின் சட்டம் மற்றும் தேர்தல் விதிகளின்படி தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் தங்களது தேர்தல் செலவுக் கணக்குகளை தேர்தல் முடிவு அறிவிக்கப்பட்ட நாளிலிருந்து 30 நாட்களுக்குள்ளாக தாக்கல் செய்ய வேண்டும். அவ்வாறு தாக்கல் செய்யாதவர்கள் ஆணையத்தால் மூன்று ஆண்டுகளுக்குத் தேர்தலில் போட்டியிட இயலாதவாறு தகுதி நீக்கம் செய்யப்படுவார்கள்.

(தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணைய ஆணைப்படி)

18/6/22

மக்கள் தொடர்பு அலுவலர்

நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் தற்செயல் தேர்தல்கள் நடைபெறும் பதவியிடங்கள்

மாநகராட்சி வார்டு உறுப்பினர்

| வ.எண் | மாவட்டம் | மாநகராட்சி | வார்டு எண் |
|---|---|---|---|
| 1. | காஞ்சிபுரம் | காஞ்சிபுரம் மாநகராட்சி | 36 |
| 2. | தஞ்சாவூர் | தஞ்சாவூர் மாநகராட்சி | 8 |

நகராட்சி வார்டு உறுப்பினர்

| வ.எண் | மாவட்டம் | நகராட்சி | வார்டு எண் |
|---|---|---|---|
| 1. | மயிலாடுதுறை | மயிலாடுதுறை நகராட்சி | 19 |
| 2. | தேனி | பெரியகுளம் நகராட்சி | 26 |

பேரூராட்சி வார்டு உறுப்பினர்

| வ.எண் | மாவட்டம் | பேரூராட்சி | வார்டு எண் |
|---|---|---|---|
| 1. | விருதுநகர் | வத்திராயிருப்பு பேரூராட்சி | 2 |
| 2. | விருதுநகர் | V. புதுப்பட்டி பேரூராட்சி | 7 |
| 3 | ஈரோடு | அத்தாணி பேரூராட்சி | 3 |
| 4. | ஈரோடு | அம்மாபேட்டை பேரூராட்சி | 2 |
| 5. | தஞ்சாவூர் | அய்யம்பேட்டை பேரூராட்சி | 9 |
| 6. | சிவகங்கை | கானாடுகாத்தான் பேரூராட்சி | 8 |
| 7. | சிவகங்கை | இளையாங்குடி பேரூராட்சி | 13 |
| 8. | நாமக்கல் | பில்லாநல்லூர் பேரூராட்சி | 8 |

ஊரக உள்ளாட்சி அமைப்புகளில் தற்செயல் தேர்தல்கள் நடைபெறும் பதவியிடங்கள்

மாவட்ட ஊராட்சி வார்டு உறுப்பினர்

| வ.எண் | மாவட்டம் | வார்டு எண் |
|---|---|---|
| 1. | கடலூர் | 26 |
| 2. | புதுக்கோட்டை | 7 |

ஊராட்சி ஒன்றிய வார்டு உறுப்பினர்

| வ.எண் | மாவட்டம் | ஊராட்சி ஒன்றியம் | வார்டு எண் |
|---|---|---|---|
| 1. | செங்கல்பட்டு | காட்டாங்கொளத்தூர் | 10 |
| 2. | செங்கல்பட்டு | மதுராந்தகம் | 15 |
| 3. | தர்மபுரி | காரிமங்கலம் | 19 |
| 4. | திண்டுக்கல் | ஒட்டன்சத்திரம் | 15 |
| 5. | கன்னியாகுமரி | குருந்தன்கோடு | 7 |
| 6. | கன்னியாகுமரி | இராஜாக்காமங்கலம் | 10 |
| 7. | கிருஷ்ணகிரி | கெலமங்கலம் | 12 |
| 8. | கிருஷ்ணகிரி | தளி | 16 |
| 9. | மதுரை | கள்ளிக்குடி | 1 |
| 10. | மயிலாடுதுறை | கொள்ளிடம் | 16 |
| 11. | நாகப்பட்டினம் | கீழையூர் | 12 |
| 12. | நாமக்கல் | கபிலர்மலை | 4 |
| 13. | சேலம் | சேலம் | 8 |
| 14. | தூத்துக்குடி | தூத்துக்குடி | 3 |
| 15. | திருச்சிராப்பள்ளி | துறையூர் | 12 |
| 16. | திருப்பத்தூர் | மாதனூர் | 24 |
| 17. | திருப்பூர் | அவினாசி | 16 |
| 18. | திருப்பூர் | பல்லடம் | 1 |
| 19. | திருவள்ளூர் | பள்ளிப்பட்டு | 1 |
| 20. | விருதுநகர் | சிவகாசி | 25 |

கிராம ஊராட்சி தலைவர்

| வ.எண் | மாவட்டம் | ஊராட்சி ஒன்றியம் | கிராம ஊராட்சி |
|---|---|---|---|
| 1. | அரியலூர் | அரியலூர் | ரெட்டிபாளையம் |
| 2. | கோயம்புத்தூர் | கிணத்துக்கடவு | 10. முத்தூர் |
| 3. | கடலூர் | கடலூர் | மருதாடு |
| 4. | கடலூர் | கம்மாபுரம் | சேப்ளாநத்தம் (தெற்கு) |
| 5. | கடலூர் | குமராட்சி | டி. புத்தூர் |
| 6. | கடலூர் | பரங்கிப்பேட்டை | நஞ்சை மகத்து வாழ்க்கை |
| 7. | தர்மபுரி | பாலக்கோடு | குட்லானஅள்ளி |
| 8. | கள்ளக்குறிச்சி | திருக்கோவிலூர் | கழுமலம் |
| 9. | கள்ளக்குறிச்சி | திருக்கோவிலூர் | வடமருதூர் |
| 10. | கள்ளக்குறிச்சி | உளுந்தூர்பேட்டை | நெய்வனை |
| 11. | மதுரை | சேடப்பட்டி | அத்திப்பட்டி |
| 12. | நாகப்பட்டினம் | திருமருகல் | ஏனங்குடி |
| 13. | நாமக்கல் | நாமகிரிப்பேட்டை | ஆமில்பட்டி |
| 14. | பெரம்பலூர் | பெரம்பலூர் | மேல்புலியூர் |
| 15. | புதுக்கோட்டை | அன்னவாசல் | வெட்டுக்காடு |
| 16. | புதுக்கோட்டை | அறந்தாங்கி | மேலப்பட்டு |
| 17. | புதுக்கோட்டை | அரிமளம் | நெடுங்குடி |
| 18. | புதுக்கோட்டை | குன்றாண்டார் கோவில் | தென்னங்குடி |
| 19. | புதுக்கோட்டை | புதுக்கோட்டை | தொண்டைமான் ஊரணி |
| 20. | சிவகங்கை | காளையார் கோவில் | முடிக்கரை |
| 21. | தஞ்சாவூர் | அம்மாபேட்டை | சுரைக்காயூர் |
| 22. | தஞ்சாவூர் | பட்டுக்கோட்டை | T. மறவக்காடு |
| 23. | தேனி | பெரியகுளம் | வடபுதுப்பட்டி |
| 24. | திருவண்ணாமலை | வந்தவாசி | அம்மணம்பாக்கம் |
| 25. | தூத்துக்குடி | ஆழ்வார் திருநகரி | குறிப்பன்குளம் |

| | | | |
|---|---|---|---|
| 26. | தூத்துக்குடி | கயத்தார் | வெள்ளாளங்கோட்டை |
| 27. | தூத்துக்குடி | திருவைகுண்டம் | அகரம் |
| 28. | திருச்சிராப்பள்ளி | இலால்குடி | சாத்தமங்கலம் |
| 29. | திருச்சிராப்பள்ளி | மருங்காபுரி | பளுவஞ்சி |
| 30. | திருப்பூர் | ஊத்துக்குளி | இச்சிப்பாளையம் |
| 31. | திருவள்ளூர் | பூண்டி | மாம்பாக்கம் |
| 32. | திருவாரூர் | குடவாசல் | நெடுஞ்சேரி |
| 33. | திருவாரூர் | கொரடாச்சேரி | பத்தூர் |
| 34. | திருவாரூர் | மன்னார்குடி | இடையர் எம்பேத்தி |
| 35. | திருவாரூர் | வலங்கைமான் | வடக்குப்பட்டம் |
| 36. | வேலூர் | குடியாத்தம் | தட்டப்பாறை |
| 37. | வேலூர் | காட்பாடி | அம்முண்டி |
| 38. | விருதுநகர் | திருச்சுழி | கல்லூரணி |
| 39. | விருதுநகர் | விருதுநகர் | அழகாபுரி |
| 40. | விருதுநகர் | விருதுநகர் | வலையப்பட்டி |

மற்றும் 436 கிராம ஊராட்சி வார்டு உறுப்பினர் பதவியிடங்களுக்கு தற்செயல் தேர்தல்கள் நடைபெறும்.

* * *